பிள்ளையார் பெருங்கதை

(வசனம்)



பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

பிள்ளையார் பெருங்கதை

(வசனம்)

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

நூல்	**பிள்ளையார் பெருங்கதை** (வசனம்)
மொழி	தமிழ்
முதற்பதிப்பு	புரட்டாதி – 2019
ஆக்கம்	**பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்**
பதிப்புரிமை	வெள்ளி அச்சுப் பதிப்பகம் மிசிசாகா, ஒன்ராறியோ மாகாணம், கனடா.
வெளியீடு	
வடிவமைப்பு	
அச்சுப் பதிப்பு	

இலவச வெளியீடு / Free Issue

Name of Book	**Pillaiyar Perum Kathai (Vasanam)**
Language	Tamil
First Edition	September - 2019
Author	**Pandit. S. V. Panchadcharam**
Copy right	Silver Print House 5030 Heatherleigh Ave Unit# 60 Mississauga, ON L5V 2G7 Canada. 905 – 290 - 9116 / 647 - 712 – 1266 silverprinthouse@gmail.com
Publisher	
Graphic	
Printing	

உ

சிவமயம்



பிள்ளையார் பெருங்கதை

(வசனம்)

பொன் போலும் நிறமுடைய தண்ணீர் செறிந்த சிகரங்களையுடைய தென்பொதிகை மலையின்கண் உறைந்த, சிறப்பு மிக்க முனிவரான அகத்தியர் மணங்கமழும் மூன்று மத நீர்களைப் பொழியும் களிற்றிறைவன் ஆனைமுகப் பெருமானின் திவ்விய வரலாற்றை இனிய செந்தமிழில் செவ்வையாகப் பாடிப் போயுள்ளார்.

அந்தப் பாடல்களிலிருந்தும், வேறு நூல் களிலிருந்தும் சுன்னாகம் வரதபண்டிதர் அவர்கள் தொகுத்தெடுத்துப் பாடிய பிள்ளையார் கதையினை விநாயகன் அடியார்கள் இலகுவில் விளங்கியுய்ய உதவவேண்டி, வாக்கிய நடையில் இங்கே தருகிறோம்.

நூல்

மேருமலையின் வடக்குப் பகுதியில் அமைந்ததும், நிலவின் குளிர்ஒளி குலவும் சோலைகள் மலிந்தது மாகிய இராசமா நகரியில் ஓர் அந்தணக் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். பிள்ளைச் செல்வம் கிடைக்காததால் அவர்கள் கோவில்களும், பூங்குளங்களும் குளிர்நிழல் தவச்சாலைகளும் பலவாக உண்டாக்கி, பிள்ளைப் பாக்கியம் தந்தருளும்படி பார்வதி பரமேஸ்வரனை வேண்டி வழிபட்டு வந்தனர்.

அவர்கள் புரிந்துவரும் கடுந்தவத்தைக் கண்டு உமைஅம்மை உள்ளம் இரங்கினார். அவர் சிவபெரு மானின் கால்களை வணங்கி, "உயிர்களுக்கெல்லாம் உயிரான சிவப்பரம்பொருளே! இந்த ஏழை அந்தணனுக்கும் இரங்கி அருள்புரிய வேண்டும்" என இறைஞ்சினார். அது கேட்டு, "அந்த வேதியனுக்கு இந்தப் பிறவியில் பிள்ளைப் பாக்கியம் அடையும் விதியில்லை" என்று சிவன் மறுத்து உரைத்தார். உமையம்மையோ விடாப்பிடியாக "எவ்வழியிலேனும், எனக்காக, குற்றமற்ற அந்த மறையவனுக்கு ஒரு புதல்வனை வரமருள வேண்டும்" எனக் கோரினார்.

தையல் சொற்கேட்டல் அறிவீனமாகும் என்று சீற்றங் கொண்ட சிவபெருமான் உமையை நோக்கி, "நீயே போய் அவன் பிள்ளையாகப் பிறப்பாயாக!" என்று ஆணையிட்டார். இதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற உமையம்மை, "சீரழிவு மிக்கதான மனிதப் பிறவிக்கு நான் உள்ளாவது துன்பகரமானது" என்று நடுக்கத்தோடு சிவனிடம் கூறினார். அவர் மீது மனம் இரங்கப்பெற்றவராகிய பரமசிவன் அவரை நோக்கி, "நீ அங்கு போய்ப் பிள்ளையாகப் பிறந்து சிலகாலம்

கழிந்ததும் நான் வந்து உன்னை மணம் புரிந்து கொள்வேன். வருந்தாதே". என்று தேற்றி விடை கொடுத்தருளினார்.

மலை மகளாம் உமையம்மையானவள் ஒரு பெண் குழந்தை உருவெடுத்து, அந்த மறையோன் மனைவியின் கருவாயமைந்து பூமியில் வந்து பிறந்தாள்.

அவள் மணப்பருவம் எய்தியபோது அவளது தாயும், தந்தையும் ஒரு மானுட அந்தணனுக்கு அவளை மணம் முடித்து வைக்க எண்ணி, அவளது ஒப்புதலை வேண்டினர். "பிறப்பும், இறப்பும் அற்ற பெரியவனான சிவனோடு அல்லாமல் வேறு எவரோடும் திருமணம் செய்யச் சம்மதிக்க மாட்டேன்" என உமையாள் மறுத்துரைத்தாள். பெற்றவர்கள், "அந்தப் பெரியவனை நீ அடைவதென்பது நடக்கும் காரியம் அன்று" என்றனர். "நான் அரிய தவத்தின் மூலம் அடைவேன்" என்று சூளுரைத்தாள் மகள்.

உமைப்புதல்வியின் உறுதிக்கு அடிபணிந்த பெற்றோர் ஒரு பூம்பொய்கை அருகே அமைந்த குளிர்நிழற் சோலையில் தவச்சாலை அமைத்துத் தோழியர் சூழ அவள் அரிய தவத்தில் ஈடுபட உதவினர்.

இந்த நிலையில் உமையின் அரிய தவத்தினைப் பார்வையிட எண்ணிய சிவபெருமான் கிழப்பிராமண உருவம் எடுத்து, குடை, தண்டு, குண்டிகை தாங்கி அந்த வாவிக்கரைக்கு வந்தார். உமையை ஆசீர்வதித்து, "பெண்ணே! என்ன வரம் பெற வேண்டி இங்கு தவம்புரிகிறாய்?" என வினவினார்,

அவள், "சிவனைக் கணவனாக அடையும் வரம் பெறுதற்பொருட்டே!" எனப் பதிலளித்தாள்.

ஏளனமாக நகைத்த அந்த வேதியன், "மாட்டில் ஏறி அமர்ந்து, மானும், மழுவும் கையிலேந்தி, காட்டிலும், சுடலையிலும் கூத்தாடித்திரிந்து, பாம்பும், எலும்பும், மண்டையோட்டு மாலையும் பூண்டு, மண்டையோட்டில் பிச்சையெடுத்து உண்டலையும் அந்தப் பித்தனை அடைய நீ தவம் செய்தால் உலகம் சிரிக்கும்!" என்று கூறிய வண்ணம் அவள் கையைப் பற்றித் தவத்தைக் குழப்பினார்.

இச்செயலால் நாணமுற்ற உமைச்சிறுமி ஓடோடி வீட்டுக்குள் புகுந்தாள். அங்கு அவளைப் பின்தொடர்ந்த தோழியர்கள் அவளைத்தேற்றினர். சிலர் அவளது பெற்றோரிடம் போய் நடந்த சம்பவத்தை முறையிட்டனர். பெற்றோரோ அந்த மறையோனைத் தமது மனைக்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டனர். அவ்வண்ணமே அத்தோழியர் சென்று அவ்வேதியனை வருமாறு அழைத்தபோது, "அந்தத் தபசிப்பெண் வந்து அழைத்தால் மட்டும் வருவேன்" என்று போக மறுத்துவிட்டான்.

இச் செய்தியைத் தோழியர் அந்தப் பெற்றாரிடம் சென்று கூறியபோது, அவர்கள் தங்கள் மகளிடம் "நீயே நேரில் போய் அந்தணமுனிவனை அழைத்து வா" என வேண்டினர். மகளோ சினத்தோடு, "அவன் சிவப்பரம்பொருளை இகழ்ந்து பேசிய சிறுமதி படைத்தவன். அவனை நான் போய் அழைக்கமாட்டேன்" என்று மறுத்துரைத்து, தோழிப் பெண்களைப் பார்த்து "நெற்றிக் கண்ணனாகிய சிவனோடு அல்லாமல் வேறு யாருடனும் திருமண

பந்தத்தினை நான் ஏற்கமாட்டேன். ஆகவே அந்த மானுட வேதியனுக்கு நான் வெளிப்படமாட்டேன்" என்று கூறினாள்.

பெற்றவர்கள், "வீட்டுக்கு வந்த முனிவனைப் பணிந்து வணங்குதல் இளையோரது கடமை" என முறைமை கூறக்கேட்ட மகளானவள் சினந்தணிந்து, தாய் சொல்லைத்தட்டுதல் பாவமாகுமென்று பயந்தாள். அந்த வேதியனிடம் சென்று அவனைச் சுற்றிவந்து வீழ்ந்து வணங்கி, அவனை வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

ஆதிமுதற் கடவுளாம் சிவனுக்கு அடியவனான அந்த வேதியன் ஒரு முதியவன்தானே என்று எண்ணி, அவனுக்கு இருக்கை வழங்கி, அவனுக்குப் பாதபூசனை பண்ணினாள். பின்னர் பொரிக்கறி, பருப்பு, நெய், பசுப்பால், மாங்கனி, பலாச்சுளை, தேன்கதலிப்பழம் என்பவற்றை அந்தணன் அருந்தும் படி பரிமாறி, சந்தனம், குங்குமம், சாந்து என்பன வழங்கி, பொன் தட்டத்தில் வெற்றிலை, பாக்கும் முன்வைத்து, அவனைச் சிவனாகவே மனதில் உருவகித்துத் தவமுறைப்படி அவன் காலில் வீழ்ந்து வணங்கினாள்.

மோனமுனிவன் அவள்பால் புன்னகைத்து, கற்றைச் சடையும், நான்கு கரங்களும், நெற்றிக்கண்ணும், நீலக்கழுத்தும், கைகளில் மானும், மழுவும், சடையில் ஒளிரும் பிறைச்சந்திரனுமாக, தான் மறைத்து வைத்திருந்த தனது சொந்த உருவத்தை அவளுக்குக் காட்டிய வண்ணம் அவளெதிரில் நின்றான். கண்டு மகிழ்ந்த உமை மீண்டும் அவனை வீழ்ந்து வணங்கினாள்.

இந்த நிலையில் சிவன் உவந்துறையும் இந்த மனைக்கு அரி, அயன், இந்திரன், அமரர், விஞ்சையர், கருடர், கின்னரர், காயவாசியர், முனிவர்கள், இராக்கதர் பூதர், இயக்கியர், புருடர், அலகைச்சித்தர், தாரகைக் கந்தருவர்கள், முதலாகப் பதினெட்டுக் கணங்களைச் சேர்ந்தவர்களும் வந்தடைந்தார்கள். எல்லோரும் கூடிச் சிவன், உமையம்மைக்குத் திருமணம் நிகழ்த்தும் திருநாளை நிச்சயித்தனர்.

உரிய நாளில் அந்த மனையின் முற்றத்தில் பவளத்தாலான தூண்களும், பொன்னாலான கூரையும் அமைந்ததும், முத்துமாலைகள் நிரையாகத் தொங் கவிடப்பட்டதும், பூரண பொற்குடம் வைக்கப்பட்டுத் திக்குத்தோறும் திருவிளக்குகள் ஏற்றப்பட்டதுமான திருமணப்பந்தலை அமைத்தனர்.

சிவ மணவாளனையும், உமையவளையும், தேவர் களெல்லோரும் சேர்ந்து, தேவகணங்களால் நிறைந்த மணமண்டபத்திலமைந்த மணவறை இருக்கையில் அமர்த்தினர். பறை ஒலிக்க, சங்கு முழங்க, வேதங்கள் ஒலிக்க, நான்முகன் திருமணக் கிரியைகள் நடத்த, தாலிகட்டி உமையைச் சிவன் கைபிடித்தபின், மணமக்கள் திருமாலுடன் தீயை வலம்வந்தனர்.

மணமக்கள் பள்ளியறையில் மகிழ்ந்துறைந்து, மறு நாள் உஞ்சையம்பதி செல்லப் புறப்பட்டனர். அழகிய பாதையில் அவர்கள் சென்று கொண்டிருந்தபோது, மணமகன் சிவன் உமையிடம், "வேறுதிசை களைத் திரும்பிப் பாராமல் வா" எனக் கூறினார். அதைக்கேட்ட உமை வேறு புதினங்களும் உண்டோ என்ற நினைப்பில் கண்களைச் சுழற்றிப்பார்த்தாள். ஓர் ஆண் யானையும், ஒரு பெண் யானையும் இன்பப் புணர்ச்சி

மகிழ்வதை அவதானித்தவளாய் நாமும் இவ்விதம் விளையாடுவோம் எனச் சிவனை வேண்டினள். அதற்கு உடன்பட்டவராய்ச் சிவன் ஆண்யானையாக, உமை பெண்யானையாக உருத்தாங்கிக் கலந்துறவாடினர்.

அதன் பயனாக, உலகம் விளக்கமுறும் வண்ணம், உயர்ந்த வானத்தேவர்கள் ஒழுக்கம் மேம்படும் வண்ணம், அந்தணர்கள் சிறப்புறும் வண்ணம், பசுக்குலம் பெருகும் வண்ணம், செந்தீ யாகங்கள், வேத ஆகமங்கள் சிறப்பெய்தும் வண்ணம், அறங்கள் பலவும் பெருகி, மறங்கள் சுருங்கும் வண்ணம், உலக அரசர்கள் நல்லாட்சி சிறக்கும் வண்ணம், யானை முகமும், நீண்ட தும்பிக்கையுடனான ஐந்து கைகளும், பூம்பாதங்கள் இரண்டும், பவளம்போற் சிவந்த வாயும், கிம்புரிப் பூணணிந்த வெண்ணிறத் தந்தங்கள் இரண்டும், கோடி சூரியப் பிரகாசம் கொண்ட திரு மேனியும், பேழை போன்ற அகன்ற பானை வயிறும், நெற்றியில் கண்ணும், முப்புரிப் பூணூலும், கற்றைச் சடையும், தங்கமுடியும், சுளகு போன்று தழைத்த செவிகளுமாய் ஐங்கரப் பெருமான் அங்கு வந்து பிறந்தார். அரவு அணிந்த சடைச்சிவனும், அன்னை உமையும் அவரைக் கண்டு மகிழ்ச்சியுற்றனர்.

சிவபெருமான் விநாயகப்புதல்வரை நோக்கி, "வானகத் தேவர்களும், பிரம்மாவும், பூலோகத்தில் உள்ளவர்களும் வந்து உன்னை வணங்க, நீ அவர்களுக்கு இன்னருள் சுரந்தருளி, தீங்குகள் நீக்கி, செம்மையான வாழ்வுநெறி வழங்கி, பல கனிகளையும் விருந்தாய் அருந்தி, அழகுமிக்க இந்த ஆலின்கீழ் வீற்றிருப்பாயாக" என்று பூலோகத்தில்

விநாயகரைக் கொலுவிருத்தி, தானும் பார்வதியும் உஞ்சையம்பதி புகுந்து இனிதே இருந்தனர்.

இந்நிலையில் கஜமுகாசுரன் என்னும் ஆனைமுக அசுரன் தேவர்களாலும், மானுடராலும், கொடிய காட்டு மிருகங்களாலும், ஆயுதங்களாலும், எமனாலும், வேறெவ்வழியாலும் தன்னுயிர் பறிக்கப்பட முடியாத வரத்தைத் தன் கடும் தவத்தின் மூலம் கடவுளிடம் பெற்றுக்கொண்டவனாய், தேவலோகத்தை நாசம் செய்து, தேவர்களை வதைத்து, இப்பூலோகத்தில் உள்ளவர்களுக்கு இடையூறுகள் புரிந்து, அக்கிர மங்கள் செய்யும் அவலங்கண்டு கவலையுற்று, இந்திரனும், தேவர்களும் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

அதைக் கேட்ட சிவபெருமான் "அஞ்சவேண்டாம்" என்று அவர்களுக்கு அபயம் கொடுத்து, விநாயகக் கடவுளைப் பார்த்து "பூதகணங்களின் பெரும்படை சகிதம் போய் கஜமுக அசுரனோடு அவனது படைகளும் முற்றாக அழியும்படி பெரும் போர் செய்து வென்று வா" என்று கட்டளையிட்டார்.

அவ்வாறே கஜமுகாசுரனுடன் நீண்ட பெரும் போர் நடத்தி, விநாயகர் அவன் பெரும் படையைப் பூண்டோடு அழித்ததையடுத்து, ஆவேசத்தோடு தேரில் ஏறி வில்லை வளைத்த கஜமுகன் மேல் தமது வெண் தந்தம் ஒன்றை முறித்து அவனது மார்பில் தைக்குமாறு எறிந்தார். இரத்தம் சோர்ந்திட வீழ்ந்த கஜமுகன் திடீரென மூஞ்சூறாக எழுந்து வந்து போரிட்டான். அந்த மூடிகத்தை அடக்கித் தன் வாகனமாக மாற்றிக்கொண்ட விநாயகரின் கையில் அவர் உடைத்தெறிந்த தந்தம் மீண்டும் வந்தமர்ந்தது.

மேலும் விநாயகர் கதிர்வேல் விழிகொண்ட வல்லபையைத் திருமணம் செய்துகொண்டு, வாகை மலர்மாலை சூடித் தமது பெரும்படை சூழ வந்துகொண்டிருந்த வழியில் எதிர்ப்பட்ட கருச்சங்கோட்டில் உள்ள திருச்செங்காட்டிலே சிவனை அர்ச்சித்து, அங்கு நிறுவிய சிவன் கோவிலுக்குக் கணபதீச்சரம் என்னும் பெயரைச் சூட்டிச் சங்கரன், பார்வதி எழுந்தருளும்படி விட்டு, மீண்டும் தமது இராசமாநகரி வட ஆலடியை வந்தடைந்தார்.

அங்கு கணங்களுக்கரசனாகக் கதிர்முடி சூட்டி வீற்றிருந்த ஐங்கரப் பெருமானிடம் வந்து, தேவர்களும், முனிவர்களும், சித்தர்கள், கந்தருவர்களும் அவரது ஏவல்கள் செய்துகொண்டு இருக்கும் போது, ஆவணி மாதச் சதுர்த்தித் திதி நெருங்கியது. விநாயகர் பிறந்ததும், அவரது விரதத்துக்குரியதும் இத்தினம் என எண்ணி அவர்கள் விதிமுறைப்படி விரதம் மேற்கொண்டனர்.

இப்படியான ஒரு சதுர்த்தி நோன்பு நாளில் விரதம் மேற்கொண்டு தேவர்கள் புரிந்த பூசைகளில் மகிழ்ந்த விநாயகர், அவர்களின் முன்னிலையில் திருநடனம் ஆடினர். அதனைப் பார்த்து அனைவரும் தொழுது ஐங்கரன் திருவடிகளை ஏத்திநிற்க, மனச்செருக்கு மிக்க சந்திரனோ கணநாதரின் பெருத்தவயிறும், உடம்பும், தாழ்ந்த தும்பிக்கையும், சுளகுக்காதுகளுங் கண்டு ஏளனமாக நகைத்தான். பார்த்த விநாயகர் சீற்றங் கொண்டார். அவனைப் பார்த்து, "என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்த உன்னை இந்தச் சதுர்த்தித் திருநாளில் பார்க்க நேரும் எவரும் பழி, பாவங்களும், பல இடையூறுகளும், அழிவுகளும், அடைவார்களாக" என்று சாபமிட்டார்.

தேவர்கள் யாவரும் அச்சமெய்தி, கருணை மிக்க கடவுள் இன்று மிக்க சினம் கொண்டுள்ளார். இதனைத் தணிக்க மார்கழி மாத வளர்பிறைச் சதய நட்சத்திரத்தில் வரும் விநாயகசட்டி விரதம் நோற்க வேண்டுமெனத் தீர்மானித்து, அதனை மேற்கொண்டனர்.

உலகத்திலுள்ள மக்கள் சதுர்த்தி விரதத்தை மேற்கொண்ட வழிமுறைகளை இனிச்சொல்வோம்.

குரு குலத்தில் உதித்த தருமனும், நான்கு தம்பியர்களும் கிருஷ்ணபகவானின் முகம் நோக்கி, "தன்னை உரியமுறையில் கடைப்பிடித்தால், உடனே எண்ணிய வரத்தைத் தருவதும், போரில் எதிர்த்த பகைவர்களை வென்று வாகை சூடவைப்பதும் எந்தத் தெய்வம் குறித்த எந்த விரதம் என எமக்கு உரைத்தருள வேண்டும்" என வேண்டினர். துளசி மார்பனான கண்ணனும் "கேளுங்கள்" என்று கூறித் தொடர்ந்தான். "உருத்திராட்ச மாலையும், திரு நீறும், அணிந்த சிவபிரான் முதலில் அருளிய விக்கின விநாயகனை வழிபடவேண்டும். அத் தெய்வம் அடியவர் வேண்டுதல்களைச் சித்திக்கச் செய்வதால் சித்தி விநாயகர் எனப்படுகிறார். அரசர்களைக் காணப் புறப்படும் போதும், யுத்தஞ் செய்திடும்போதும், கல்வி, கலைக்கல்வி தொடங்கும் போதும், அலுவல்கள் புரியும்போதும் அக்கடவுளைச் சிந்தை செய்தால் அவை எல்லாம் வெற்றிபெறும். ஐங்கரப் பெருமானுக்கான ஒரு விரதம் உள்ளது. அதைக் கடைப்பிடித்தால் சந்ததி தழைக்கும். செல்வம் சேரும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். பகைவர்களையும் வெற்றி கொள்ளலாம்" என்று கண்ணபிரான்

கூறினார். "அந்த விரதத்தைக் கைக்கொள்ள வேண்டிய விதத்தையும், விநாயகருக்குப் பூசை புரிய வேண்டிய வழி முறைளையும் விளக்கியருள்க" எனப் பாண்டவர் வேண்டினர். அதற்குப் பதிலாகக் கிருஷ்ணபகவான், "ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியின் முதல்நாட்காலை தூய நீராடி, சந்தியா வந்தனம் முறையாய்ப்புரிந்து, ஐங்கரக்கடவுளை அர்ச்சிக்க வேண்டும். வெள்ளியிலோ, பொன்னிலோ, தூயமண்ணிலோ, ஐங்கரனின் திருவுரு அமைத்துத் தூய்மையான ஓர் இடத்தினை மலர்கள், கொடி களால் அலங்கரித்து அதில் வைத்து வழிபடவேண்டும்.

விநாயகரின் உருவைத் தியானித்தவண்ணம் மறு நாள் நிறைகுடம் வைத்து, உரிய உபசாரங்களுடன் பஞ்சாமிர்தத்தால் அபிடேகம் செய்து, வாசனை சார்த்தி, கணேச மந்திரம், ஈசுரபுத்திரன் மந்திரம் என்பன சொல்லி இரண்டு ஆடைகள் சார்த்தி, "உமைசுதன்" எனும் மந்திரத்தோடு தீபங் காட்டி, பச்சறுகோடு இருபத்தொரு மலர்வகை போட்டு உமாசுதன், கணாதிபன், உயர்கரிமுகத்தோன், குமாரகுரவன், பாசாங்குசகரன், ஏகதந்தன், ஈசுரன் புத்திரன், ஆகுவாகனன், அருள்தருவிநாயகன், சர்வகாரியமும் தந்தருள்புரிவோன், ஏரம்பமூர்த்தி, எனும் திருப்பெயர்கள் சொல்லி அர்ச்சனை செய்து, மோதகம், அப்பம், முக்கனி, மாதுளங்கனி, தேங்காய், பருப்பு, நெய், பொரிக்கறி, பால், தயிர், முதலிய சுவைப்பொருள்களைப் படைத்து, "உருத்திரப் பிரிய" எனும் மந்திரத்தோடு விநாயகருக்கு நிவேதனமாக்கி, பதினாறு வகை (குடை, கொடி, முதலாய) உபசாரங்களும் செய்து, வேதியர்களுக்குச் சுவை மிகு உண்டிகள் வழங்கி, சந்தனம், முத்து, தானங்கள்,

தெட்சணைகள் அந்தணர்களுக்கு வழங்கி, விநாயகர் திருவுருவம் பொறித்த ஆடையை அருச்சகருக்கு வழங்கி இந்த வழிபாட்டு முறையில் எவர் பூசை செய்தாலும் அவர் நினைத்த காரியம் நிறைவேறும். போரிலும் வெற்றி பெறுவர்.

அரன் இவனை அர்ச்சனை பண்ணி முப்புரங்களை எரித்தான்.

உருத்திரன் இவனை உபாசனை பண்ணி விருத்திராசுரனை வீழ்த்தினான்.

அகலிகை இவனை அர்ச்சனை பண்ணிக் கண வனை மீளவும் பெற்றாள்.

தமயந்தி இவனை வழிபட்டு மீளவும் நளனை அடைந்தாள்.

இராமன் இவனை வணங்கிப் பகைவரை வென்று சீதையை மீட்டான்.

பகீரதன் இவனை அர்ச்சித்து வான் நதியாம் கங்கையைப் பூமிக்கு வருவித்தான்.

அட்ட தேவதைகளும் இவ்வழியில் அட்டபோகமும், அமிர்தமும் பெற்றனர்.

இவ்வாறு வணங்கியே சிசுபாலன் கவர்ந்து சென்ற ருக்மிணியை, அவனோடு போரிட்டு, நான் மீட்டுக்கொள்ள முடிந்தது.

"எனவே விநாயகக் கடவுளைப் பூசனைபுரிந்து தாம் விரும்பியவற்றைப் பெற்றுக்கொண்டவர்கள் தொகை எண்ணில் அடங்காது. அவ்வாறே நீங்களும் விநாயகரை அர்ச்சித்தால் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெறுவீர்கள்" என்று கண்ணபரமாத்மா

கூறக்கேட்ட பாண்டவர்கள் அன்றிலிருந்து ஐங்கரக் கடவுளைப் பூசனை புரிந்து, திருதராட்டினன் மக்களைப் போரிலே வென்று அரசர்களாய் முடி சூடி, தாம் நினைத்த பேறுகள் யாவும் பெற்றுயர்ந்தனர்.

இக்கதை இவ்வளவில் நிற்க, விநாயக விரத மேன்மை ஓங்கிய இன்னுமொரு கதையை இங்கே எடுத்துக்கூறுவோம்.

பிரமாவின் மைந்தனான காசிபனுக்கும், வஞ்சகமனம் படைத்த மாயையாம் மனைவிக்கும் மக்களாகச் சூரன் என்றொருவனும், தங்கை, தம்பியரும் பிறந்து, பூலோகம் முழுமையையும் அழித்தும், சுவர்க்க உலகத்தின் வளங்களைக் கெடுத்தும், இந்திரன் முதலான தேவர்களை வருத்தியும் நிரந்தரமாக நீசத்தனங்கள் புரிந்து வந்தனர்.

அதனால் இந்திரனும், தேவர்களும், முனிவர்களும் இரசதகிரியில் உறையும் சிவப்பரம்பொருளிடம் சென்று, முறையிட்டனர். "அச்சூரனை வென் றொழிக்கக் கையில் வேலேந்தும் ஒரு புதல்வனைத் தருகிறேன் போய் வாருங்கள்" என்று விடைகொடுத்த சிவன், அதற்காக உமையம்மையோடு கூடலில் ஈடுபடுவதற்குப் பதில், அவருடன் ஊடல் கொண்டு முரணிநிற்பது கண்டு கவலையுற்ற தேவர்கள் கூட்டமாக அக்கினி பகவானிடம் சென்று "நீபோய்ச் சூரன் புரியும் அட்டூழியங்கள் அனைத்தையும் சிவபெருமானுக்கு விளக்கிக் கூறு" எனக் கோரினர்.

"சிவன் தன் மீது மலர்க்கணை ஏவிய மன்மதனைப் பார்வையால் சுட்டெரித்தவராதலால் நான் மாட்டேன்" என அவன் அஞ்சி மறுத்தான். "நீ அவரது கையில்

அமர்ந்து இருப்பதாலும், அவரது நெற்றிக்கண்ணாக இருப்பதாலும் அபாயமில்லை! போ!" எனத் தேவர்கள் வேண்டுதல் செய்ய, அக்கினிதேவன் சம்மதித்து, உமையம்மையுடன் சிவனிருந்த பள்ளியறைக்குச் சென்றான்.

அவனைக் கண்ட உமை நாணி ஒதுங்க, சிவன் அறுமுகக்கடவுளை ஆறு தீப்பொறிகளாகத் தம் நெற்றிக்கண்ணிலிருந்து அவன் கரங்களுக்குச் செலுத்தினார்.

அவற்றை ஏந்தி வந்த அக்கினி பகவான், வாயுபகவான் கைகளில் கொடுத்தான். சூடு தாங்கவொண்ணாமல் வாயுபகவான் அவற்றைக் கொண்டோடிப்போய்க் கங்காதேவியாம் புனல் மகளிடம் கொடுக்க, அவளும் சூடு தாங்கமுடியாமல் சரவணப் பொய்கையிலுள்ள ஆறு தாமரை மலர்கள் மீது வைத்தாள்.

ஆறு தீப்பொறிகளும் ஆறு அழகிய குழந்தைகளாக உருக்கொண்டன. வருந்திக் கொண்டிருந்த தேவர்கள் மகிழ்வுற்று, ஆறு தேவகன்னியர்களை அக்குழந்தைகளுக்கு முலைப்பாலூட்டுமாறு அனுப்பி வைத்தனர்.

சிவனும் உமையும் இடப வாகனத்தில் வந்திறங்கி, உமை அக்குழந்தைகளுக்கு முலைப் பாலூட்டி ஒன்றாய் அணைத்தபோது அவை ஆறு முகமும், பன்னிரண்டு கைகளும், பன்னிரண்டு கண்களுங்கொண்ட ஒரு பிள்ளையாக - ஆறுமுக சுவாமியாக உருவம்பெற்றன.

சிவமூர்த்தியானவர் அக்குழந்தைக்குக் கதிர் முடிகள் சூட்டி, வேல் முதலிய ஆயுதங்களை

வழங்கி, எத்திசையும் செல்லவல்ல தேரொன்றும் கொடுத்து, "பூதப்படைகள் உனக்குத் துணைவரப் போய், அசுரர் குலத்தைப் போரிட்டு அழிப்பாயாக" என்று கூறி அனுப்பினார். முருகப்பெருமான் போய் இருளைப்பருகுஞ் சூரியனைப்போல அசுரர் படையை அழித்துக் கிரவுஞ்சம் எனப்பட்ட மலையையும், சூரனின் நெஞ்சையும் துளைக்கும்படி வேலெறிந்து, சூரனை வென்று, எல்லோரும் வியக்கும்படி தேவேந்திரனின் மகளாம் தேவயானையை மணம் முடித்து, தேவேந்திரனைத் தேவலோகத்துக்கு மீண்டும் அரசனாக்கி, உலகம் ஒளி பெறும் விதமாக வந்து அமராவதி நகரில் இனிது குடி கொண்டிருந்தார்.

அங்கே சண்முகப் பெருமானைக் காண நேர்ந்த தேவமாதர்கள் தமது மனக் கற்பை இழந்து தவித்தனர். அதனைக் கண்ணுற்ற தேவர்கள் அனைவரும் கூடிச் சிவபெருமானிடம் சென்று வணங்கி, முருகப்பெருமான் தங்கள் அமராவதி நகரில் இருக்காது நீங்க அருள் புரிய வேண்டுமென விண்ணப்பித்தனர்.

சிவனும் முருகன் மீது சினம் கொண்டு, கடிந்ததுகண்டு, வினைவேரறுக்கும் வேற்பெருமான் கிளம்பிப் பரதேசஞ் சென்றார். அது கண்டு உமை யம்மை அருந்துயர் அடைந்தபோது சிவனார், "வருத்தப்படாதே!" என்று தேற்றி "வா! நாங்கள் சொக்கட்டான் விளையாடுவோம்" என உமையை அழைத்தார். விளையாட்டில் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் ஒரு நடுவரில்லையே! என்று உமை கூறிய வேளை, தமது முற்பிறவிப் பாவத்தால் திருமால் அங்கே வந்தார். அவரை நடுவராக வைத்துச் சிவனும், உமையும் விளையாடிய போது

உமையே ஆட்டத்தில் வென்றார். ஆயினும் சிவனும் தானே வென்றதாக வாதிட்டு, நடுவரான திருமாலைத் தீர்ப்புக் கூறும்படிகேட்டபோது, சிவனின் கண்ஜாடைக்குக் கட்டுப்பட்டுத் திருமாலும் சிவனே வென்றதாக வஞ்சகத் தீர்ப்பு வழங்கினார்.

இவற்றையெல்லாம் அவதானித்த உமையம்மை "நீ சிவனது தூண்டுதலுக்குக் கட்டுப்பட்டுப் பொய்த் தீர்ப்பு வழங்கியதால் பசித்தீ வயிற்றைக் குடையும் நெடிய குருட்டுப்பாம்பாய் உருமாறிப்போய் வடஆலின் கீழ்க்கிடப்பாயாக" எனச் சாபமிட்டார். மறுகணம் திருமால் நெடிய குருட்டுப்பாம்பாய் உருமாறிப்போய் வட ஆலின்கீழ் கிடந்தார்.

இந்த நிலையில் தேவகன்னியர் ஏழுபேர் ஆனை முகக் கடவுளின் அருட்கீர்த்தியை உலகத்தாருக்கு அறிவிக்க வேண்டும் என்ற பெருவிருப்போடு தம்பநூலேணிகள் மூலம் வானுலகிலிருந்து மண்ணுலக வடவாலின் மருங்கில் வந்து இறங்கினர்.

இந்த ஆலின் கீழ் வீற்றிருந்து அருள் புரியும் ஆனை முகக் கடவுளைத் தொழுதேத்திக் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்தபின் ஒரு நாள் நூலி ழைகள் வாங்கி ஒவ்வொருவரும் இருபத்தோரிழைகள் தங்கள் கைகளில் கட்டிக்கொண்ட தேவகன்னியர்கள் தினமும் ஒவ்வொரு வேளைமட்டும் உணவருந்திக் கொண்டு, வேதத்து ஆதியும், பூமியில் எழுத்தும் விநாயகருக்கான எழுத்தும், மூன்றெழுத்தாலான மந்திரமும் ஒரு மனமாகச் சிந்தையுள்ளே செபித்து வந்தனர். அத்தோடு விநாயகருக்குத் தீப, தூபம் முதலான பதினாறு உபசாரங்களால் இருபது

தினமும் வழிபாடாற்றி வந்து, அடுத்த நாள் சதயமும் ஆறாம் (சட்டித்) திதியும் கூடிய இருபத்தோராம் நாள் தெளிந்த நீரில் நீராடி, விநாயகர் வீற்றிருக்கும் கோவிலை மெழுகி, திருவிளக்கேற்றி, பட்டாடை களால் மேல்விதானங்கட்டி, மலர்மாலைகளால் கோவிலை அலங்கரித்துக் கணபதிக் கடவுளைத் திருமுழுக்காட்டி, பட்டாடைகளை அணிவித்து, சந்தன வாசனைகளைத் திருமேனியில் பூசினர்.

தொடர்ந்து, செருந்தி, சண்பகம், செங்கழுநீர், குருந்து, மல்லிகை, கோங்கு, பிச்சி, புன்னை, பாதிரி, ஞாழல், இருவாட்சி, தாமரை, முல்லை, கொன்றை, நொச்சிப்பூ, குவளை, காந்தள், ஆத்தி, கடம்பு, செவ்வந்தி, எருக்கு, மலர்க்கரவீரம், பச்சிலை நொச்சி, படர் கொடி அறுகு, கூவிளம் முதலிய பூக்கள், வில்வங்கள் சார்த்தித் தூப, தீபங்கள் விநாயகர் மகிழும்படி வழங்கினர்.

அடுத்து, அப்பம், மோதகம், அவல், எள்ளுருண்டை, முக்கனி, தேங்காய், முதிர்ந்த கரும்பு, சீனி, தேன், சர்க்கரை, செவ்விளநீர், பால், நெய், தயிர், பருப்பு, என்பவற்றுடன் கற்பகவிநாயகர் களிக்கும் வண்ணம் திருவமுது படைத்தனர்.

இவ்வாறு அத்தேவ கன்னியர் விநாயகப் பெருமானுக்குப் பூசனை புரிவதைக் கண்ட, அங்கே கிடந்த பாம்பாகிய திருமாலும் "நானும் விநாயகரைப் பூசிக்கவேண்டும் பெண்களே" என இரந்தான்.

அவனுக்கும் இவ்வித வழிபாட்டுக்கு வேண்டியவற்றை வழங்கி, அப்பெண்கள் அவனை வழிபட ஊக்கினர்.

தேவர்களுக்கு அதிபதியாகிய ஐங்கரப்பெருமான் அருளால் மீண்டும் தன் பாம்பு உருவம் நீங்கப் பெற்ற திருமால், உடனே உஞ்சைமாநகர் சென்று சிவனின் திருவடி தொழுதான். இதைக் கண்டு சினம் கொண்ட உமை, "நான் இட்ட சாபம் நீங்கியது எப்படி?" எனச் சிவன் மீது சீறிப்பாய்ந்து சட்டென்று தன்னறைக்குள் புகுந்து, கதவைப்பூட்டிக்கொண்டாள்.

இது எப்படி நடந்ததென்று சிவன் வினாவ, "விநாயகப்பெருமான் செய்த கருணையால்" என்று மாயவன் பதிலளித்தான். மனம் மகிழ்ந்த சிவ பெருமான் உமையின் கதவு திறப்பிக்கும் வரம் பெற விரும்பி, மாயவன் விநாயகர் கதை சொல்லி நிற்க, விநாயகப்பெருமானை நோக்கி வழிபட்டார். அதன் பயனாக உமாதேவியார் தமது அறைக்கதவு திறந்து சிவனை அணுகி நின்றார். சிவன் சிரித்தார். அது கண்டு "எனது பிடிவாதம் தோற்றதுகண்டா சிரித்தீர்கள்?" என்றாள் உமை. "இல்லை! உன்மகன் விநாயகன் அருட்பெருமை கண்டு மகிழ்ந்து சிரித்தேன்" என்றார் சிவன்.

அப்படியானால் பரதேசம் போன என் மகன் முருகன் திரும்பிவரும் வரம் கேட்டு நானும் விநாயகனை வழிபடுவேன்!" என்றாள் உமை. சிவன் விநாயகரின் திருக்கதை சொல்லி நிற்க, உமை விநாயக வழிபாட்டில் ஈடுபட்டாள். அதன் பயனாக, புதிதாக மணந்த வள்ளியுடனும் முருகன் அங்கு வந்து சேர்ந்து, அம்மை அப்பன்களை வணங்கினான்.

"கண்ணா! நீ குருட்டுப் பாம்பு ஆகுவாயாக!" எனப் பார்வதி திருமாலுக்குச் சாபமிட்டதும், குருட்டுப்பாம்பான மாயவன் விநாயகரைப் பூசித்துச் சாபம் நீங்கியதும், உமையாள் பூட்டிய கதவைச் சிவபெருமான்

விநாயகரைப் பூசனை பண்ணித் திறக்கவைத்ததும், உமையம்மை விநாயகரைத் தியானித்து, பரதேசம் போன முருகனைத் திரும்பி வரவைத்ததுமான இந்தச் செய்திகளையும், தேவர்கள் விநாயகரை வழிபட்டு வரங்கள் பெற்ற பல செய்திகளையும் நாரதமுனிவர் சொல்லக் கேட்ட பலர் அவ்வழிபாட்டில் இறங்கி வேண்டிய வரங்களைப் பெற்றனர்.

வச்சிரமாலி என்பவன் விநாயக வழிபாட்டால் தன்னுடற் பிணி நீங்கி, மன்னனாகி, திலோத்தமையை மணந்து வலிய மக்களைப் பெற்றெடுத்துக் கடைசியில் முத்தியும் பெற்றுக் கைலையுற்றான்.

பரந்த மண்ணுலகாளும் அரசுரிமை வரங்கேட்டு விக்கிரமாதித்தன் என்பவன் கடும் தவம் வருந்தி மேற்கொண்டான். அவனது மனையாளான இலக்கணசுந்தரி தானும் நோன்பிருக்கப் போவதாகக் கையில் காப்புக்கட்டி விரதத்தில் இறங்கினாள். சில நாட்கள் சென்றதும் மனம் தளர்ந்தவளாய், விரதத்தைக் கைவிட்டு, கையில் கட்டியிருந்த காப்புநூலை அவிழ்த்துக் காய்ந்து கிடந்த ஒரு கொவ்வைக் கொடியருகில் போட்டாள்.

அந்தக் கொவ்வைக் கொடி உயிர்பெற்று இலையும் தளிருமாய்த் தழைத்துப் படர்ந்து கிடக்க, வேப்பஞ்சேரியில் சிறையிலிருந்த ஒருபெண் கறிக்காக அந்தக் கொவ்வை இலைகளைக் கொய்யச் சென்றபோது, அதன் அருகில் கிடந்த காப்புநூலைக் கண்டு எடுத்துத் தன் கையில் கட்டி, அப்பம், காய்கனிகள் படைத்து, பயபத்தியோடு விநாயகர் நோன்பை மேற்கொண்டாள். அதனால் ஆனைமுகக்கடவுள் அவள் மீது கருணை கொண்டு, முன்பிருந்ததைப்போல் இரண்டு மடங்கு சிறப்பினை

அவளுக்கு அருளினார். அது கண்டு அவளை அரசன் தன் அரண்மனையில் வந்து வாழச்செய்தான்.

விக்கிரமாதித்தன் ஓரிரவு உறங்கும் வேளை, உக்கிரவடிவில் அவன் கனவில் தோன்றிய விநாயகர் "இலக்கணசுந்தரி உன் மாளிகையில் இருந்தால் உனக்கும், நாட்டிற்கும் ஆபத்து. அவளை அகற்றிவிடு" என்று எச்சரிக்கக் கேட்டு, விழித்தெழுந்து, அவன் இலக்கணசுந்தரிக்கு இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே யானைகளும், குதிரைகளும், செத்து வீழ்ந்ததோடு மேலும் பல அழிவுகள் ஏற்பட்டன. அதை அறிந்த விக்கிரமாதித்தன் அக்கணமே மனைவி இலக்கணசுந்தரியை வெளியேற்றினான்.

அவள் வணிகன் ஒருவன் வீட்டில் தஞ்சம் புகுந்தபோது, அவனது மணிகள், முத்துக்கள், யாவும் வெறுங்கற்களாயின. அஞ்சிய அவன் அவளை அகற்றினான்.

அவள் போய் ஒரு விவசாயியின் வீட்டில் புக அவனது பயிர்கள், வளங்கள் நாசமாயின. அச்சமுற்ற அவனும் அவளை விரட்டினான்.

அவள் குயவன் ஒருவனது வீட்டில் சரண்புகுந்தாள். அங்கும் குயவனது பானை, சட்டிகள் யாவும் நொறுங்கியது கண்டு அவனும் அவளை வெளியேற்றினான்.

ஆடைகள் சலவை செய்யும் ஒரு தொழிலாளி வீட்டுக்குள் அவள் அடைக்கலம் புகுந்தபோது அங்கும் ஆடைகள் கிழிந்து சேதமுற்றதால் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டாள்.

பூத் தொழிலாளி ஒருவன் வீட்டினுள் அவள் புகுந்தபோது, பூமாலைகள் எல்லாம் பாம்புகளாக

உயிர்த்தெழக் கண்டு அஞ்சிய வீட்டுக்காரன் அவளைத்திட்டி விரட்டினான்.

கடைசியாக இலக்கணசுந்தரி ஔவைப்பாட்டியின் வீட்டினில் தஞ்சம் புகுந்தாள். அக்கணத்திலிருந்து ஔவையார் சென்ற வீடுகளிலெல்லாம் அவரைத் திட்டினார்கள். கல்லால் அடித்தார்கள். தள்ளி விழுத்தி னார்கள், குத்தினார்கள், பழித்துப்பேசினார்கள்.

ஔவையார் வீடு திரும்பி, "இப்படியான கேவலப்பட்ட நீ யார்?" என இலக்கணசுந்தரியை வினவியபோது அவள், "மார்த்தாண்ட மன்னனின் மூத்தமகள் நான். விக்கிரமாதித்தனின் மனைவி நான்" என்றாள்.

அவளை நோக்கி, "சரி இப்பொழுது வீட்டின் தரையை மெழுகு" என்றார். அவளும் அதற்காகச் சென்று சாணியெடுக்க முற்பட்டபோது சாணி உழுத்துப் புழுவாய் மாறக்கண்டு கலங்கி நின்றாள். அது கண்ட ஔவை தானே போய்ச் சாணிஎடுத்து வந்து தரையை மெழுகினாள்.

விளக்கேற்றிவிட்டு ஔவை அவளைப் போய் புத்தகத்தை எடுத்துவரும்படி பணித்தாள். அதன்படி இலக்கண சுந்தரி புத்தகத்தை எடுக்கப்போனபோது புத்தகம் பாம்பாகிப் படமெடுத்து ஆடியது கண்டு அவள் மயங்கி வீழ்ந்தாள். இவற்றை அவதானித்த ஔவை தானே சென்று புத்தகத்தை எடுத்து வந்து நூல் போட்டுப் பார்த்தபோது இவையெல்லாம் விநாயகப் பெருமானின் லீலைகள் எனக் கண்டு கொண்டாள். தவநெறி தவறி விநாயகரை நிந்தித்த பழிக்காளாகி அவலப்படும் அந்த இலக்கணசுந்தரியை விநாயகர் நோன்பை (மீண்டும்) மேற்கொள்ளப் பணித்த

ஔவையார் அவள் கையில் மூவிழைக் காப்பு நூல் கட்டி, விநாயகருக்கு அப்பமும், அவலும். பல பண்டங்களும் படைத்து, விநாயகர் கதையைப் பாடினார். அக்கதையைப் பயபத்தியோடு கேட்டபடி நோன்பிருந்து இலக்கணசுந்தரி கற்பக விநாயகர் கருணையைப் பெற்றாள்.

அதையடுத்து, விக்கிரமாதித்தன் வேட்டைக்குச் சென்று திரும்பும்போது, படைவீரர்களுக்கும், தனக்கும் ஏற்பட்டிருந்த தண்ணீர்த்தாகத்தைத் தீர்க்க வேண்டி ஔவை மனையை அடைந்தான். ஔவையார் அரசனின் தாகத்தையும், களைப்பையும் கண்ணுற்று அவற்றை நன்கு தீர்க்க விரும்பி, அப்பமும், நீரும் அரசனுக்கு வழங்கும்படி இலக்கணசுந்தரிக்குப் பணித்தார்.

அதற்கிணங்க அவள் தண்ணீர்ச்செம்பும், ஒரு பணிகாரமும் விக்கிரமாதித்தனுக்கு வழங்கினாள். அவற்றை அரசன் அருந்தி, படைவீரர்கள் அருந்தி, ஆனை, குதிரைகள், அருந்தியும் அவை குறைவுபடாதிருந்தன. அதனைக்கண்டு அதிசயித்த அரசன் "இவ்வாறு சமைத்த நீ யார் பெண்ணே" என வினாவினான். அவள் மௌனமாய் நிற்க, ஔவை சென்று அரசனுக்கு "இவள் உன் மனைவி இலக்கணசுந்தரி. விநாயக நோன்பினை இவள் நோற்றதன் பயனிது!" என்று பதில் கூறினார்.

மகிழ்ச்சியுற்ற விக்கிரமாதித்தன் இலக்கண சுந்தரியைச் சிவிகைமேல் ஏற்றித் தன்மாளிகை சேர்ப்பித்து, பெண்களுள் உயர்நிலையில் வைத்து, சேடிப்பெண்கள் சூழ்ந்து தொண்டு செய்ய வைத்தான். இலக்கணசுந்தரி மகிழ்வுற்றிருந்தாள்.

(பிள்ளையார் பெருங்கதை முற்றிற்று)



இறையருள் உறைவிடமாம்

இணுவையம்பதிச் செம்மண், தன்னிலே

இணைத்திட்ட முது தமிழாசானே!

இவ்விலக்கியப் பணிசெய்ய நம்முடன் ~ என்னையும்

இணைத்திட்ட செம்மலே!

இவ்வையத்தில் நீவிரூட்டிய

இனிய நல் மொழியறிவு சைவத்துக்காய் ~ தமிழுக்காய்

இறுதிவரை என்னுடன் பயணிக்கட்டும்.

முகுந்தன் சிவதாசன்

அச்சுப் பதிப்பு : சில்வர் பிறின்ற் ஹவுஸ், மிசிசாகா, ஒன்ராறியோ மாகாணம், கனடா.